செ.வெ.எண் : 04 / ஜூன் நாள் : 04.06.2018

# இராமநாதபுரம் மாவட்டம்

## காசநோய் சளி பரிசோதனைக்கான நவீன கருவிகளுடன் கூடிய நடமாடும் வாகனம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் உள்ள காசநோய் சிகிச்சை மையத்தில் இன்று (04.06.2018) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், காசநோய் சளி பரிசோதனைக்கான நவீன கருவிகளுடன் கூடிய நடமாடும் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

காசநோயானது காற்றின் மூலமாக எளிதில் பரவக்கூடிய நோயாகும். இந்நோய் மைக்கோ பேக்டீரியம் டியூபர்குளோசிஸ் என்ற நுண்கிருமியினால் பரவுகிறது. இரண்டு வாரம் தொடர் இருமல் மற்றும் சளி போன்றவை இருந்தால் காசநோய்க்கான பரிசோதனை மேற்கொள்வது அவசியம். காசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்களின் ஆலோசனையின்படி தொடர்ச்சியாக சரியான மருந்து, மாத்திரைகளை சாப்பிடுவதன் மூலம் காசநோய் பாதிப்புகளிலிருந்து பூரண குணமடையலாம். தீவிர காசநோய் பாதிப்பினை கண்டறிய இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.15 இலட்சம் மதிப்பிலான CBNAAT (Cartridge Based Nucleic Acid Amplification Test) என்ற பரிசோதனை வசதியும், சிகிச்சை வசதிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் திருத்தி அமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் தமிழகத்தில் CBNAAT நவீன பரிசோதனை வசதிகளுடன் கூடிய இரண்டு நடமாடும் வாகனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாகனமானது குறிப்பிட்ட கால அட்டவணைப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் சிரமங்களைப் போக்கிடும் விதமாக அவர்களின் இருப்பிடத்திற்கு நேரடியாகச் சென்று சளி பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் உள்ள காசநோய் சிகிச்சை மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இந்த நடமாடும் நவீன காசநோய் பரிசோதனை வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக இராமநாதபுரம் அரசு செவிலியர் பயிற்சி பள்ளியைச் சார்ந்த மாணவிகள் அனைவரும் பேரணியாக சென்று இவ்வாகனம் குறித்தும், காசநோய் பாதிப்பு குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியானது காசநோய் சிகிச்சை பிரிவில் துவங்கி புதிய பேருந்து நிலையம் அருகேயுள்ள வழிவிடு முருகன் கோவில் வழியாக மீண்டும் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் நிறைவு பெற்றது.

அதன்பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

மாவட்டத்தில் காசநோயினை முற்றிலுமாக ஒழித்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் காசநோய் தொடர்பான சளி பரிசோதனை மேற்கொள்ளும் நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் வாகனம் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாகனமானது இன்று (04.06.2018) முதல் 09.06.2018 வரையிலான நாட்களில் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் நேரடியாகச் சென்று காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் சளி பரிசோதனை மேற்கொண்டு உரிய சிகிச்சை வழங்கிட ஏதுவாக திட்டமிடப்பட்டு கால அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த CBNAAT பரிசோதனையின் மூலம் இரண்டே மணி நேரத்தில் காசநோய் பாதிப்பு குறித்த விவரங்களை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும். மாவட்டத்தில் தற்பொழுது மொத்தம் 718 நபர்கள் காசநோய்க்கான சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாவட்டத்தினை நூறு சதவீதம் பாதிப்பு இல்லாத மாவட்டமாக உருவாக்குவதே மாவட்ட நிர்வாகத்தின் நோக்கமாகும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் காசநோய்) மரு.ஏ.சாதிக்அலி, இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஜவஹர்லால், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, மருத்துவர்கள் மரு.ஸ்ரீதர், மரு.கருப்பசாமி, காசநோய் சிகிச்சை மைய மருந்தாளுநர் திரு.ஆர்.ஜெயசங்கர் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**